Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : STC. 1066/2024 |
| Deposition of witness for Prosecution | : P.w.1 |
| Name | : மரியலூயிஸ் |
| Father Name/Husband Name | : யாக்கோப் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 02.07.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எதிரி எந்த தேதி, மாதம், வருடத்திலிருந்து பழக்கம் என்றால் 2021 ம் ஆண்டு முதல் அவர் எனக்கு பழக்கம். நான் நீதிமன்றத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றேனா என்றால் இல்லை சட்ட பணிகள் ஆனையத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றேன். நான் 2015 ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். எனக்கு பணிக் கொடை எவ்வளவு வந்தது என்றால் ரூ20,00,000/- வந்தது. அந்த பணத்தை வைத்து தான் வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் பணிபுரிபவர்கள் யாருக்காவது வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ராஜா என்பவர் எதிரியை எனக்கு அறிமுகப்படுத்தியவர், அவருக்கும் நான் எந்த பணமும் கொடுத்ததில்லை. பணிக்கொடை பணத்தை மகனுக்கு திருமணம் செய்து விட்டு மகளுக்கு திருமணம் செய்வதற்காக மீதி பணத்தை வைத்துள்ளேன். எனது மகன் திருமணத்திற்க்கு ரூ8,00,000/- செலவானது, மீதி பணத்தை என் சொந்தக்காரர்களிடம் கொடுத்து வைத்துள்ளேன். ஜான் பீட்டருக்கு ரூ3,00,000/- ம் எனது மைத்துனர் அண்ணாஒளி என்பவருக்கு ரூ5,00,000/- மற்ற சொந்தக்காரர்களுக்கு கொஞ்ச கொஞ்சமாக கொடுத்துள்ளேன். மேற்சொன்ன பணத்தை நான் 2017 ம் ஆண்டு கொடுத்தேன். வக்கீல் சிவ சிதம்பரம் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவருடன் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. வக்கீல் சிவ சிதம்பரம் நண்பர்களுக்கு ஏதேனும் பணம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. நான் 2021 ம் வருடம் அக்டோபர் மாதம் நான் பணம் கொடுத்த 3 நபர்களிடம் இருந்து பணத்தை திருப்பி கேட்டேன். 3 நபர்களும் என்னிடம் ரூ10,00,000/- திருப்பி கொடுத்தார்கள். அந்த ரூ10,00,000/- பணத்தை வங்கியில் செலுத்தினேனா என்றால் இல்லை. அந்த ரூ10,00,00/- ஐ ரூ500/- தாள்களாக பெற்றுக்கொண்டேன். அந்த ரூ10,00,000/- த்தான் எதிரிக்கு ராஜா என்பவர் மூலமாக கொடுத்தேன். எதிரியிடம் பணத்தை நான் கொடுக்கவில்லை ராஜா என்பவர் தான் என்னிடம் இருந்து வாங்கி கொண்டு கொடுத்தேன். ராஜா என்பவரிடம் எந்த

தேதி, மாதம், வருடத்தில் பணத்தை கொடுத்தேன் என்றால் தேதி நியாபகம் இல்லை, அக்டோபர் மாதம் 2021 ல் கொடுத்தேன். எங்கு வைத்து ராஜா என்பவரிடம் பணத்தை கொடுத்தேன் என்றால் ராஜா என்பவர் எனது வீட்டிற்கு காலை 11.00 மணியளவில் வந்து பணத்தை பெற்றுக்கொண்டார். எனக்கும் எதரிக்கும் நேரடியாக தொடர்பு இல்லை என்றால் ராஜா என்பவர் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். எந்த தொடர்பும் அறிமுகமும் இல்லாத எதிரிக்கு எப்படி பணம் கொடுத்தேன் என்றால் ராஜா என்பவர் என்னை எதிரியின் வீட்டிற்கு என்னை அழைத்து சென்று கடன் கொடுக்குமாறு கேட்டார் நான் கொடுத்தேன். எதிரியை அறிமுகப்படுத்தியதிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து பணம் கொடுத்தீர்கள் என்றால் சுமார் 2 முதல் 3 மாதங்கள் கழித்து பணம் கொடுத்தேன். எதிரி சொந்த வீடு வைத்திருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி நீதீயரசர் தமிழ்வாணன் அவர்களின் உறவினர் என்று தெரிந்து தான் நான் பணம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி இயல்பாகவே பணம், சொத்துக்கள் உள்ளவர் அதனால் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்திவருகிறேன். 2021 ம் வருடம் அக்டோபர் மாதம் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. ஏன் அந்த பணத்தை கணக்கில் காட்டவில்லை என்றால் Retirement benefit பணத்திற்கு வருமான வரி செலுத்த தேவையில்லை அதனால் நான் காட்டவில்லை. எனக்கு டைரி எழுதும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. நான் செலவு செய்யும் பணத்தை ஏதாவது கணக்கு எழுதி வைக்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. ராஜாவிடம் நான் கொடுத்து அனுப்பிய பணம் எதிரியிடம் போய் சேர்ந்ததா என்று எதிரியை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் காசோலையை எப்போது கொடுத்தார் என்றால் 15.04.2024 அன்று காசோலையை கொடுத்தார். நான் ராஜாவிடம் demand செய்து கேட்டேன் காசோலையை ராஜா என்பவர் தான் என்னிடம் வந்து கொடுத்தார். அந்த காசோலை நிரப்பப்படாமல் இருந்ததா என்றால் இல்லை காசோலை கையொப்பம் செய்து நிரப்பப்பட்டிருந்தது. அந்த காசோலையை யார் நிரப்பினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டடப்படும் ம.த.சா. 1 தான் எதிரி எனக்கு கொடுத்த காசோலை. அந்த காசோலையில் கையெழுத்து ஒரு மையிலும், மற்ற விவரங்கள் வேறொரு மையிலும் நிரப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் காசோலையை நான் வங்கியில் செலுத்தினேன் என்றால் 17.05.2024 அன்று வசூலுக்காக வங்கயில் செலுத்தினேன். 18.05.2024 அன்று அந்த காசோலை திருப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டடப்படும் ம.த.சா.3 தான் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் தேதி 25.04.2024 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காசோலையை வங்கியில் வசூலுக்கு செலுத்தியது மே மாதம் என்ற போது வழக்கறிஞர் அறிவிப்பு எப்படி ஒரு மாதத்திற்கு முன்னரே அனுப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அந்த பதில் அறிவிப்பில் எதிரி என்னை யார் என்று தெரியாது என்றும், என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரி எனக்கு கொடுத்த காசோலை வரிசையின் முன்னும் பின்னும் உள்ள காசோலை எண் வங்கியில் பாஸாகி உள்ளது என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியிடம் நான் பணம் கொடுத்த விவரம் ராஜா என்பவரை தவிர வேறு யாருக்காவது தெரியுமா என்றால்

தெரியாது. ம.த.சா.1 காசோலையை தவிர வேறு எந்த ஆவணமும் நான் எதிரியிடம் இருந்து பெறவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் சிவ சிதம்பரம் தான் எதிரியின் மைத்துனி தமயந்தி என்பவருக்கு ரூ3,00,000/- கடனாக கொடுத்தார் என்றும், அதற்காக எதிரியிடம் 3 காசோலை மற்றும் பிணை பத்திரம் பெற்றுக்கொண்டார் என்றும், அந்த காசோலையை சிவ சிதம்பரம் என்னிடம் கொடுத்து எதிரியின் மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. ராஜா என்பவரை விசாரித்தால் தான் உண்மை நிலவரம் தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் பினாமியாக செயல்படுகிறேன் என்று சொன்னாலும் இந்த காசோலைக்கு ஈடாக பணம் நான் கொடுக்கவில்லை என்பதனால் இந்த வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்று சொன்னாலும் சரியல்ல. தவறான சங்கதிகளை வைத்து எதிரியின் மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ம.த.சா. 3 வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கறிஞர் கையொப்பத்தின் கீழ் 27.05.2024 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சென்னாலும் போஸ்டல் ரசீதில் 27.05.2024 அன்று தான் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரிதான்.